**Original suit number : 1/2014.**

**Dated 06.06.2025**

**DW1 : தன்ராஜ்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதித்தரப்பு குறுக்கு விசாரணை:**

வாதிகள் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா சொத்து கோவிலுக்கு வாதியப்பட்டது என்று கேட்டுள்ளார். தாவா சொத்தை காலி செய்து சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கில் வாதி பரிகாரம் கோரி உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும்.தாவா சொத்தானது புல எண் 57/2 உள்ளது. அதன் மொத்த பரப்பளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் இடத்தில் மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 5525 சதுர அடி ஆகும். நான் 2525 சதுர அடியில் குடி இருக்கிறேன். மீதி உள்ள இடம் காலி மனையாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நானும் என் தாயாரும் குடியிருந்து வருகிறோம். நான் குடியிருக்கும் இடத்தை இதற்கு முன்பு யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் எனக்கு முன்பு ஒரு நபர் வாடகைக்கு இருந்தார். அவர் பெயர் தெரியாது. எனக்கு ராஜம் என்பவர் சொத்தை வாடகைக்கு விட்டார். அவருக்கு நான் வாடகை செலுத்தினேன். எனக்கு வாடகைக்கு விட்ட ராஜம் என்பவர் தற்போது உயிருடன் இல்லை. அதன் பின்பு ராஜம் என்பவர் என் தகப்பனார் இரண்டாம் பிரதிவாதிக்கு வாடகை கொடுத்தார். அவ்வாறு என் தகப்பனார் எவ்வளவு காலம் முதல் பிரதிவாதிக்கு வாடகை கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது கோவிலுக்கு சொந்தமானது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனக்கு நோட்டீஸ் கொடுத்தபோது தெரிய வந்தது. அதன்பிறகு நான் கோவிலுக்கு வாடகை செலுத்தினேனா என்றால் கோவில் தரப்பில் இருந்து என்னிடம் வந்து தாவா சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்றும் வாடகையை கோவிலுக்கு கொடுக்க வேண்டும் என்றும் எனக்கு என்னிடம் ஒரு அறிவிப்பும் கேட்டார்கள் அதன்படி நான் அறிவிப்பு கொடுத்தேன்.